## மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

## 2014 ஜனவரி மாதம் 07 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

## நிகழ்ச்சி நிரல்

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

**01. கௌரவ சிறிகமல் பிலீசியன் த சில்வா உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி மற்றும் மகளிர் விவகார நன்நடத்தை அத்துடன் சிறுவர் பாதுகாப்புச் சேவை தொடர்பான அமைச்சரிடம் 2013.11.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/v (1)13/15)**

அ. பமுனுகம வைத்தியசாலையின் கற்பிணிகளின் வாட் உரிய முறையில் செயற்படவில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா?

ஆ. அவ் வைத்தியசாலையின் இரசாயண கூடம் செயலிழந்து காணப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அவ் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு உரிய முறையில் செயற்படவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. வைத்தியசாலையின் பணியாற் தொகுதியினரிடையே காணப்படும் புரிந்துணர்வு இன்மையின் காரணமாக நோயாளிகளும் நிர்வாகமும் சிக்கலுக்கு உட்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. இந் நிலைமை தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**02. கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2013.11.26 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/v (1)13/16)**

அ. உங்கள் அமைச்சு ஏற்பாட்டின் கீழ் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் வழங்கப்பட்டதா?

ஆ. அம் மீற்றர்களின் வகை மற்றும் உற்பத்திப் பெயர் யாது ?

இ. ஒரு மீற்றர் ஒன்றின் விலை எவ்வளவு ?

ஈ. பகிர்ந்தளிக்கப்பட்ட மீற்றர்களின் எண்ணிக்கை எத்தனை ?

உ. ஒரு மீற்றருக்காக எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டது ?

ஊ. விவசாய அமைச்சின் கைத்தொழில் அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்குரிய மீற்றர் வகையை விட உங்கள் அமைச்சு வழங்கிய மீற்றர்களில் வேறுபாடு காணப்படுகின்றதா ?

எ. உங்கள் அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட மீற்றர் பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகளில் ஒட்டி காட்சிப்படுத்தப்பட்ட ஸ்டிகரில் எதன் அடிப்படையில் மஹரகம நகர சபைத் தவிசாளரின் உருவப்படம் உள்ளடக்கப்பட்டிருந்தது ?

**03. கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2013.11.26 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/v (1)13/17)**

அ. உங்கள் அமைச்சின் கீழ் மற்றும் அதற்குரிய தாபனங்களின் கீழ் சென்ற ஐந்து வருடங்களினுள் நீங்கள் கலந்து கொண்ட வெளிநாட்டு சுற்றுலாக்களின் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. சுற்றுலா சென்ற நாடுகள் யாவை ?

இ. எவ்விடயத்திற்காக ?

ஈ. சென்ற 05 வருட காலத்தினுள் வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்காக உங்கள் அமைச்சு மற்றும் அதற்குரிய தாபனங்கள் செலவு செய்த நிதி வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு ?

உ. அந்த வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் ஈடுபட்ட கால எல்லை யாது ?

ஊ. உங்களுடன் இவ் வெளிநாட்டு சுற்றுலாக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் முறையே யார் ?

எ. அவர்கள் எதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர் ?

ஏ. அச் சுற்றுலாக்களுக்காக செலவு செய்த நிதி வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு ?

ஒ. இதை விட இக்கால எல்லையினுள் நீங்கள் வேறு அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் வெளிநாட்டு சுற்றுலாக்களில் ஈடுபட்டீர்களா ?

ஓ. அப்படியாயின் அந் நாட்கள் மற்றும் அந் நாடுகள் எவை ?

**04. கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்றுறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் 2013.11.26 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/v (1)13/18)**

அ. ஹோமாகம- ஹங்வெல்ல புனித ஜோன் கொஸ்தா அதிபராக இருந்த திரு. எஸ்.கே. கருணாரத்ன அவர்களின் காலத்தில் நிகழ்ந்தது என குறிப்பிடப்படும் ஊழல் மோசடி தொடர்பான கணக்காய்வு அறிக்கை ஒன்று காணப்படுகின்றதா ?

ஆ. எக்காலத்தினுள் சிற்றுண்டிச்சாலையில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 99640/- அறவிட்டுக் கொள்ள ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை யாது ?

இ. 05 மலசல கூடங்களின் கூரையை நிர்மாணித்ததற்காக ரூபா. 815,000/- பட்டியலுக்காக உரிய தாபனங்களுக்கு காசோலையின் மூலம் கொடுப்பனவினை மேற்கொள்ளாது பணியாட்களின் பெயரில் காசோலையை வழங்கியது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

ஈ. ரூபா. 1,073,260/- பெறுமதியான செலவு மதிப்பீட்டிற்காக உறுதிச் சீட்டொன்றைத் தயாரிக்காது அதிபரின் பெயரில் ரூபா 830000/- நிதியும், திருமதி. சாமினி மானமடுவ ஆசிரியரின் பெயரில் ரூபா 10000/- அயேஷ் லக்மால் என்ற பெயர் கொண்ட பாடசாலை தொழிலாளியின் பெயருக்கு ரூபா 3510/- சுதேஷ் குணவர்தன என்ற பெயர் கொண்ட நூலக உதவியாலளரின் பெயரில் ரூபா 31500/- ஆக நிதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக எடுத்த நடவடிக்கை யாது ?

உ. அப் பணியாட்கள் அப் பாடசாலையில் எவ்வாறு கடமை செய்கின்றனர் ?

ஊ. வலையக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆரியரத்ன மற்றும் அதிபர் தொடர்பான ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டு முறைப்பாட்டிற்கு நீங்கள் எடுத்த நடவடிக்கை யாது ?

**05. கௌரவ முஜிபுர் ரஹ்மான் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிருவாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு அமைச்சரிடம் 2013.12.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (கே/v (1)13/19)**

(அ) உங்களது அமைச்சின் கீழ் காணப்படும் வியாபாரப் பெயர் பதிவாளர் திணைக்களத்தில் தனியார் பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா ?

(ஆ) அப் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அப் பாடசாலைகள் ஆரம்ப பாடசாலைகள் மற்றும் இரண்டாம் தரப் பாடசாலைகள் என வகைப்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

(ஈ) இல்லையாயின் ஏன் ?

(உ) இத் தனியார் பாடசாலைகள் சட்ட விரோதமானவை என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?

(ஊ) அப்படியாயின் அப் பாடசாலைகள் தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும் / அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

## 01. கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினர்

இலங்கை மின்சார சபையில் வருடாந்தம் இடம் பெறும் அதிகளவு நட்டத்தை குறைப்பதற்கு எனக் குறிப்பிட்டு சென்ற ஏப்ரல் மாதத்து மின்சாரக் கட்டணத்தை அதிகரித்து அந்த நட்டத்திற்குரிய நிதியை பொது மக்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மழை கிடைக்காது நீர் வற்றியதன் காரணமாக நாட்டின் மின்சாரத் தேவையில் (18%) அளவு நீர் மின் உற்பத்தியின் மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பது இடம்பெற்றது எனவும், தனியார் மின் நிலையங்களின் மூலம் கூடிய விலைக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதும் வேறு முறைகளின் மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது பல மாத காலம் தொடக்கம் பெய்யும் அடை மழையின் காரணமாக நீர் தேக்கங்கள் நிரம்பி நீர் மீதமாக்கப்பட்டு 85% மின்சாரத்தினை உற்பத்தி செய்வது நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் இடம் பெறுகின்றது எனவே அதிகரிக்கப்பட்ட மின்சாரப் பட்டியலை உடனடியாக குறைத்து மக்களுக்கு சலுகையை வழங்குமாறு இந்த மேல் மாகாண மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது. **(பி/v (01)13/05)**

## 02. கௌரவ அசோகா லங்காதிலக உறுப்பினர்

30 வருட காலம் தொடக்கம் பயங்கரமான யுத்தத்திற்கு முகங்கொடுத்து எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்த எங்களுக்கு இன்று இந் நாட்டினுள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கண்டு மகிழ்ச்சி அடையக் கூடியதாக உள்ளது. இதைப் பார்க்கும் போது எங்களது எதிர்கால பரம்பரை எங்களை விட அதிஷ்டசாலிகளாகுவதுடன் இவ் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்மந்தமாக நாங்கள் பெருமையடையக் கூடியதாக உள்ளது.

இதன் மூலம் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுகமானது ஆசியாவுக்குமே ஆச்சரியம் மிக்க நடவடிக்கை ஒன்றாகும். இதன் மூலம் எங்களது நாட்டின் புவியியல் அமைப்புக் கூட மாற்றம் அடைந்துள்ளது. உலகத்தில் உற்பத்திச் செய்யப்படும் எந்தவொரு பாரிய கப்பல் ஒன்றுக்குக் கூட எங்கள் நாட்டில் சேவையைப் பெற்றுக் கொள்ளவும், உலகத்தில் எந்தவொரு நாட்டிற்கும் எங்களது துறைமுகத்தினூடாக சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இதன் மூலம் இடம் கிடைத்துள்ளது. பல்வேறுபட்ட எதிர்ப்பார்ப்புக்களைக் கொண்டவர்கள் எவ்வாறு விமர்சித்த போதும் நாட்டை நேசிப்பவர்கள் இந்த விஷேடமான செயற்பாட்டினைப் பாராட்ட வேண்டும். நாட்டினைப் பாதுகாப்பதற்கு போராடிய இலங்கை மக்களின் நன்மைக்காக இவ்வாறான துறைமுகம் ஒன்றினைக் கட்டி மக்களுக்கு ஒப்படைத்ததற்கு மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் கௌரவ ரோஹித அபேகுணவர்தன அவர்களுக்கும் துறைமுக அதிகார சபையின் தலைவர் அவர்களுக்கும் இதற்கு ஒத்துழைப்பு நல்கிய எல்லா உத்தியோகத்தர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் இதனைப் பார்வையிட்டு பாராட்டினை வழங்கிய யாவருக்கும் இந்த மேல் மாகாண மாகாண சபை தனது நன்றியைத் தெரிவித்து ஆசிர்வதிக்கின்றது. **(பி/v (01)13/06)**

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.12.06 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.